**தலைப்பு 295 – வர்த்தக திணைக்களம் - 2023**

**------------------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 295 - வர்த்தக திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வர்த்தக திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 ஏப்ரல் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வர்த்தக திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் திருத்தபட்டட்ட நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) இன் பிரகாரம் செயல்நிமித்த உபகட்டுநிதி பெறுகின்ற பதவிநிலை உத்தியோகத்தரால் அந்த பணிகள் நிறைவுபெற்றவுடன் அந்த செயல்நிமித்த உபகட்டுநிதி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2023 மே 03 ஆந் திகதி மூன்று உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணத் தொகையில் ரூபா 1,049,227 அவ்வாறு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதி அறவிடும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல் வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 50 (II) இன் பிரகாரம் மதிப்பீடு இயலுமான வரை முழுமையாகவும் சரியாகவும் தயாரித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்த போதிலும் 03 மூலதன செலவின விடயங்களில் நிதிஏற்பாடு செய்யப்பட்ட தொகையில் 55 சதவீதம் 95 சதவீதம் வரையிலான வீச்சில் கூட்டுமொத்தமாக ரூபா 5,497,128 நிதிஏற்பாடு பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | அரச செலவின முகாமைத்துவத்தின் கீழ் அத்தியவசிய சேவைகளுக்காக மாத்திரம் செலவினங்கள் செய்யப்பட்டதன் காரணமாக நிதிஏற்பாடு பயன்படுத்தப்படா திருந்தது. | மதிப்பீடுகளை இயலுமான வரை முழுமையாகவும் சரியாகவும் தயாரித்தல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | | |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 257 | உறுதிப்படுத்தப்பட்ட உறுதிச் சீட்டுக்களுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த போதிலும் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு இணைந்த படிகள் மற்றும் அமையப் படிகளாக மொத்தமாக ரூபா 922,810 அவ்வாறு | இரண்டு உறுதிச்சீட்டுகள் உறுதிப்படுத்தப் படாமல் கைவிடப்படடிருந்த போதிலும் தவறவிடப்பட்டிருந்த போதும் அந்நியச் செலாவணி விநியோகிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட உறுதிச்சீட்டிற்குரிய வங்கிற்கு | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட உறுதிச்சீட்டுக்களுக்கு மாத்திரம் கொடுப்பனவு செய்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உறுதிப்படுத்தலின்றி இரண்டு உறுதிச்சீட்டுக்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தில் கணக்காளரின் கையொப்பம் உள்ளடக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | நிதிப் பிரமாணம் 880 | பிணைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பிணை வைக்கவேண்டிய உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்க வில்லை. | தேவையான நடவடிக்கைகள் அமைச்சின் மூலம் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை பெறப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கையில் தடைசெய்யப்பட்ட மற்றும் நடவடிக்கை எடுக்கக்கூடிய மானியங்களின் மூலமும் மற்றும் ஏற்பாடுகளில் இருந்தும் உள்நாட்டு கைத்தொழிலைப் பாதுகாக்கும் நோக்கில் 2018 இன் 2 ஆம் இலக்க எதிர்ப்பு மற்றும் வரிச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. சட்டம் அறிமுகப்படுத்தும் போது 05 வருடங்கள் கடந்திருந்த போதும் இந்த சட்டத்தை அமுல்படுத்துதற்காக தேவையான நியதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்காமையின் காரணமாக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | வர்த்தக திணைக்களத்தை கலைத்தல் தொடர்பாக 2023 நவம்பர் 22 ஆம் திகதி வழக்கொன்று தொடரப்பட்டமையாலும், அது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தால் இந்த அமைச்சிற்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் வர்த்தக திணைக்களத்தை கலைப்பதற்குரிய செயற்பாடுகள் எதுவும் 2024 மே 08 ஆம் திகதி வரையும் மேற்கொள்ளாதிருக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தேவையான நியதிகள் விரைவாக வர்த்தமானியில் பிரசுரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ‘‘வர்த்தக திணைக்களத்தின் பணிப்பொறுக்கள் மீளாய்வு செய்தல்’’ போன்ற 2023 யூன் 26 ஆந் திகதி அமைச்சரவை குறிப்புடன் சமர்ப்பிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழு அறிக்கையின் 4 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட 06 பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு 2023 யூலை 24 ஆம் திகதிய அமப/23/1216/627/019 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற பணிப்பாளர் மற்றும் வர்த்தக உத்தியோகத்தர்களை நியமிக்கப்பட வேண்டிய முறை தொடர்பாக வியாபார வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு செயலாளருக்கு பரிந்துரை வழங்கி இரண்டு மாதகாலம் கடந்திருந்த போதும் அந்த பரிந்துரைகளை அமுல்படுத்தப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் வழங்கப்பட்ட காலத்தில் அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | வர்த்தக திணைக்களத்தை கலைத்தல் தொடர்பாக 2023 நவம்பர் 22 ஆம் திகதி வழக்கொன்று தொடரப்பட்டமையாலும், அது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தால் இந்த அமைச்சிற்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் வர்த்தக திணைக்களத்தை கலைப்பதற்குரிய செயற்பாடுகள் எதுவும் 2024 மே 08 ஆம் திகதி வரையும் மேற்கொள்ளாதிருக்கு மாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளை அமுல்படுத்தப்படல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ நலிவுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டின் முதலாவது, இரண்டாவது மற்றும் தரை மாடியில் மின்சாரக் கட்டணம் முறையே ரூபா 537,705 தொகை, ரூபா 663,117 மற்றும் ரூபா 4,158,572 தொகை மீளாய்வாண்டில் அந்த மாடிகளில் மின்சாரக் | M மாடியின் பட்டியலும் தரை மாடியின் மின்சாரப் பட்டியலுடன் உள்ளடக்கப்பட்டமை மற்றும் திணைக்களம் மற்றும் அமைச்சில் ஸ்தாபித்து சகல மாடிகளிலும் வளிப்பதனாக்கி | செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணம் ரூபா 1,382,078 தொகை, ரூபா 1,386,206 மற்றும் ரூபா 11,035,179 ஆனமையால் தரை மாடியின் மின்சாரக் கட்டணம் அசாதாரணமாக உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இயந்திரங்களுக்குரிய Cooling Tower இன் மின்சார பயன்பாட்டுச் செலவினமும் தரை மாடியில் சேர்க்கப்பட்டமை பட்டியல் உயர்ந்த பெறுமதியை கொண்டிருப்பதற்கு காரணமாக இருந்தது. | |
| (ஆ) | வர்த்தக திணைக்களம் நடாத்திச்செல்லப்படுகின்ற கட்டிடத்தில் தரை மாடியின் ஒரு பகுதி சதொச நிறுவனத்தின் மூலம் விற்பனைக் கடையொன்று பேணிச் செல்லப்படுவதுடன் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் மின்சாரத்திற்காக அந்த நிறுவனத்திலிருந்து மாதந்தோறும் அறவிடப்படுகின்றது. மீளாய்வாண்டிற்காக அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் ரூபா 2,157,813 மேலும் அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | அறவிட வேண்டிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக தொடர்ச்சியாக லங்கா சதொச நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதியினை அறவிடுதல் வேண்டும். |
| (இ) | திணைக்கத்திற்கு முன்னாள் பதிற்கடமை வர்த்தக பணிப்பாளர் நாயகத்திற்கு இலண்டன் தூதுவரினால் நிதிக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக இலத்திரனியல் தபால் செய்தியொன்று தொடர்பாக முறைப்பாடு 2022 நவம்பர் 01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக தாபன விதிக்கோவையின் XLVIII அத்தியாயத்தின் 13 ஆவது பிரிவின் பிரகாரம் ஆரம்ப விசாரணை நடாத்தப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக அமைச்சிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் தற்போது மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சு செயலாளரின் 2023 மார்ச் 20 ஆந் திகதிய இலக்கம் MF/06/23/50/2023 என்ற கடிதத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் பங்களிக்கின்ற நிறுவனத்தின் மூலம் முழுக் கிரயத்தையும் செலவிடாத வெளிநாட்டு கற்கை/ பயிற்சி/ கலந்துரையாடல் / மாநாடுகள் / சுற்றுலாவிற்காக உள்நாட்டு நிதியம் மூலம் செலவினங்களைச் செய்து அரசாங்கத்தின் உத்தியோகத்தர்கள் பங்குபற்ற முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் ரூபா 1,453,925 செலவில் மூன்று உத்தியோகத்தர்கள் 2023 மே மாதம் 08 ஆம் திகதி முதல் 10 ஆந் திகதி வரை அபூதாபி நகரத்தில் நடைபெற்ற வருடாந்த முதலீட்டுக் கூட்டத்திற்கு பங்குபற்றியிருந்தனர். | சனாதிபதி செயலகத்தின் 2023 மார்ச் 15 ஆம் திகதி PS/CSA/00/1/4/8 கடிதத்தின் பிரகாரம் கூட்டிணைந்த படி மற்றும் அமையப் படியாக ரூபா 1,453,925 தொகை முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. | கடிதத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் உத்தியோகத்தர்களின பொறுப்பாகும். |
| (உ) | மீளாய்வாண்டின் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் ‘‘பீ’’ இணக்கக் கூற்றில் திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் மீதி மற்றும் திறைசேரி கணனி அச்சிடலின் பிரகாரமான மீதிகளுக்கு இடையே ரூபா 294,544 வேறுபாடொன்று 17 வருடகாலத்தில் இருந்து காணப்பட்டது. | 2005 ஆம் ஆண்டில் இருந்து இணக்கம் செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டமையால் 2005 ஆம் ஆண்டில் இருந்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | புத்தகங்களுக்கிடையே இணங்காமைகளைத் தீர்த்து வைப்பதை துரிதப்படுத்துதல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலதிகப் பணிப்பாளர் மேலதிக வர்த்தகப் பணிப்பாளர் நாயகப் பதவியினை உள்ளடக்கி விஷேட மற்றும் முதலாவது தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட 10 பதவிகளில் 05 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டது. | மேலதிக வர்த்தக பணிப்பாளர் நாயகம் பதவிக்கு ஆட்சேர்த்தல் நடைமுறையின் பிரகாரம் தகைமை பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் இருக்காமையினால் அதற்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப் படவில்லை. தகைமைகளைப் பூர்த்தி செய்த வர்த்தக பணிப்பாளர் இருவர்கள் வெளிநாட்டு கடமைகளில் ஈடுபடுகின்றமையினால் திணைக்களத்தில் கடமைக்காக அறிக்கையிடப்பட்ட பின்னர் அவருக்கு அந்த பதவி உரித்தாகும். | வழங்கப்பட்டுள்ள அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |